# களனிப் பல்கலைக்கழகம், இலங்கை
# விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகளுக்கான அழைப்பு

# துணைவேந்தர் பதவி

இலங்கை, களனிப் பல்கலைக்கழகத்தின் பேரவையானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34 (1) (a) பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகளுக்கான அழைப்பு விடுக்கின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தர் ஆவார். அவர் பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும், கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். அவர் பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை ஆகியவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் உபபிரிவு (7) மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பிரகாரம், துணைவேந்தர் குறித்த பதவி காலத்திற்கு முன்னதாக அவர் பதவியிலிருந்து வெளியேறாவிடின் அல்லது நீக்கப்படாவிடின், மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் தினம், இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தினை வழங்குதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் அறிமுகப்படுத்துதல், மற்றும் பேரவைகளின் முடிவுகளை அமுல்படுத்துதல் ஆகியவற்றுடன் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகத்திற்கு பொறுப்பானவர் என்பதனால் சிறந்த கல்விக் கொள்கை, வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல், ஜனநாயக முகாமைத்துவம், பாரபட்சமற்ற சிறந்த தலைமைத்துவம் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் வலுவான ஆய்வுப்பின்னணி, தலைமைத்துவத்தினை நிரூபிக்கும் தகுதிகள், பரந்துபட்ட தொடர்புடையவர்களுடன் சிறந்த தொடர்பாடல் திறன், கொள்கை விடயங்கள் தொடர்பாக சிறந்த தெளிவான புரிந்துணர்வு மற்றும் தீர்மானங்களை செயற்திறன்மிக்க முறையில் அமுல்படுத்தும் திறமைகளுடன் உயர்கல்வியடைவுப் பின்புலத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். அவர் சமூகத்திற்கான பொறுப்புணர்வ உட்பட பல்கலைக்கழகத்தின் செயல்நோக்கு மற்றும் இலட்சியம் தொடர்பாக ஆழமான புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் / பெயர் முன்மொழியப்படுபவர்கள் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக இணையத்தளமான http://www.kln.ac.lk இற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதிஉயர் சம்பளத்தை பெற உரித்துடையவர் என்பதோடு, அடிப்படைச் சம்பளத்தின் 15% இனை உபசரணைக் கொடுப்பனவாகப் பெற்றுக் கொள்வதற்கும், பதவிக்குரிய பிற கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உரித்துடையவராவர்.

தெரிவு முறைமை குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 மே 04 ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2020 இனை களனிப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரி / பெயர் முன்மொழியப்படுபவர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 63 வயதிற்கு குறையாவனவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகளுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- **I.** அவர் துணைவேந்தராக நியமிக்கப்படின் அவரால் முன்மொழியப்படும் களனிப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கான நோக்கு பற்றிய கூற்றுடன் விண்ணப்பதாரியின் பிறந்த தினம் உள்ளடங்கிய முழுமையான சுயவிபரப்பட்டியல்.
- **II.** விண்ணப்பதாரர் / பெயர் முன்மொழியப்படுபவர் தற்போதைய துணைவேந்தர் எனின் அல்லது முன்னர் துணைவேந்தர் பதவியினை வகித்தவர் எனின், மேலே I இல் குறிப்பிடப்பட்ட ஆவணத்திற்கு மேலதிகமாக அவர் தன்னுடைய பதவி காலத்தில் சாதித்த சாதனைகள் மற்றும் அடைவுகள் பற்றிய அறிக்கையினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- **III.** பெயர் முன்மொழிவுகளாயின் பெயர் முன்மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.
- **IV.** விண்ணப்பதாரர் / பெயர் முன்மொழியப்படுபவர் அரச பொதுச்சேவை, கூட்டுத்தாபனங்கள் நியதிச்சபைகள், களனிப் பல்கலைக்கழம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பனவற்றில் ஏதாவதொன்றில் சேவை புரிபவராயின், அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியுமா என்பதனை தெரியப்படுத்தும் தொழில்தருனரின் கடிதம்.

விண்ணப்பதாரிகள் மதிப்பீட்டுக் குழுவினால் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர். தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக, விண்ணப்பதாரி எவரேனும் ஒருவருக்கு மதிப்பீட்டுக் குழுவின் முன் நேரடியாக தோற்ற முடியாதுவிடின், அவர் **காணொளி மாநாட்டினூடாக** நேர்முகத் தேர்விற்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்.

மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் குறைந்தது பத்து நிமிடங்கள் (10) எனினும் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாமல் சுருக்கமான முன்னளிப்பு ஒன்றிற்காக விசேட பேரவைக் கூட்டம் ஒன்றிற்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகள் **பதிவாளர், பேரவையின் செயலாளர், களனிப் பல்கலைக்கழகம், தளுகம, களனி, இலங்கை** என முகவரியிடப்பட்டு **23.02.2023 அன்று பி.ப. 03.00 மணி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும். விண்ணப்பம் / பெயர் முன்மொழிவினை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"துணைவேந்தர் பதவி"** எனக் குறிப்பிடல் வேண்டும்.

23.02.2023 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிராகரிக்கப்படும். இவ்விளம்பரம் தொடர்பாக ஏதாவது தெளிவுபடுத்தல்கள் அல்லது தெளிவின்மை ஏற்படின் களனிப் பல்கலைகழகத்தின் பேரவையின் தீர்மானமே இறுதியானது ஆகும்.

**கே.கே.கே. தர்மதிலக**
**பதிவாளர் மற்றும் பேரவையின் செயலாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தளுகம,**
**களனி,**
**இலங்கை.**

20.01.2023